# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 03.12.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

பகைவன் தனது பகைமையின் உச்சத்தை அடைந்து விடும்போது அல்லாஹ்வின் அடியார்களை அழிப்பதற்கு எல்லா வகையான வழிமுறைகளையும், ஆயுதங்களையும் அவன் பயன்படுத்துவான். பல்வேறு வழிமுறைகளின் மூலமாக பாதிப்பை ஏற்படுத்துவதற்காக திட்டங்களை தீட்டுவான். உயிர் மற்றும் பொருள் நஷ்டத்தை ஏற்படுத்த அவனால் எதையெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்வான். எந்த அளவுக்கு என்றால் எல்லா தரப்பு வயதினருக்கும் பிரிவினருக்கும் மனரீதியான துன்பங்களை ஏற்படுத்த அவர்களின் மன அமைதியை சீர்குலைக்க கீழ்த்தரமான மற்றும் மனிதத்தன்மையற்ற செயலை செய்கின்றான். குழந்தை, முதியவர், பெண்கள் என யாரையும் கருத்தில் கொள்வதில்லை. அல்லாஹ்வின் அடியார்களை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதிலிருந்து தடுப்பதற்காக கொடூரமான மற்றும் காட்டுமிராண்டித்தனமான போக்கை மேற்கொள்கிறான். அதுபோன்ற நிலையில் பொறுமை மற்றும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்ற நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு அவனிடத்தில் உதவி தேடுவார்கள். எதிரிகளின் வரம்பு மீறுதல் மற்றும் அதனால் நம்பிக்கையாளர்களிடம் ஏற்படும் நிலையினை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

எதிரிகள் தமது பகைமையில் கூச்சல், குழப்பத்தில் முன்னேறி விட்ட போது நாம் ஏக இறைவனுள் அடைக்கலம் தேடிக் கொண்டோம்.

நிர்பந்தம் மற்றும் அநீதிக்குள்ளான நம்பிக்கையாளர்களின் நிலை மற்றும் அவர்களின் எதிர்நடவடிக்கையின் காட்சி இதுதான்; இவ்வாறுதான் இருக்கவும் வேண்டும்.

இன்று இந்த நிலை உலகின் முஸ்லிம் நாடுகளில் அஹ்மதிகளைத் தவிர்த்து வேறு எவரிடத்திலும் நமக்கு தென்படுவதில்லை. மேலும் இதன் உச்சத்தை அனுதினமும் பாகிஸ்தானில் நம்மால் காண முடிகிறது. இந்த கவிதையில் எங்கு எதிரிகளின் பகைமையின் உச்சத்தைப் பற்றிய செய்தி உள்ளதோ அங்கு அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தி கொள்ளக்கூடிய பொறுமை மற்றும் உறுதிப்பாட்டின் காரணமாக அல்லாஹ்வின் முன் தொடர்ந்து குனியக்கூடியவர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. எதிரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நாங்கள் உங்களது விஷயங்களை செவிமடுத்து உங்கள் பின்னால் வந்து விடுவோம். உங்கள் கையேந்தி கருணை பிச்சையை நாங்கள் கேட்போம்; உங்கள் கால்களில் வீழ்ந்து நாங்கள் உயிருக்காக மன்றாடுவோம் என எண்ணித்தான் நீங்கள் எங்கள் மீது இந்த அடக்குமுறை மற்றும் கொடுமைகளை செய்து வருகின்றீர்கள். இது உங்களின் தப்பெண்ணம் ஆகும். நாங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களாவோம். அவர்கள் பொறுமை மற்றும் தைரியத்தில் தானும் உயர்ந்த முன்மாதிரியை வெளிப்படுத்தினார்கள். மேலும் பரிசுத்த ஆற்றலின் மூலமாக பொறுமை மற்றும் உறுதிப்பாட்டில் உயர்ந்த தரத்தை நிலைநிறுத்தும் உணர்வை தமது சஹாபாக்களிடத்திலும் ஏற்படுத்தினார்கள். இதனைப் பற்றி நான் கடந்த குத்பாக்களில் குறிப்பிட்டுள்ளேன். அநீதிகளும், கொடுமைகளும் அவர்களை அஹத், அஹத் (அல்லாஹ் ஒருவன்) என்று முழக்கமிடச் செய்ததேயொழிய எந்த சிலையும் பெரியது என அவர்கள் முழக்கமிடவில்லை. கொடுமைகள் அதிகரித்த போது அவர்கள் அல்லாஹ்வின் முன் நடுநடுங்கி தமது ஸஜ்தா செய்யும் இடத்தை நனைத்தார்களே தவிர எந்தவொரு சிலையின் முன்போ அல்லது பூசாரி முன்போ நடுநடுங்கியவாறு வணங்கவில்லை. எனவே இந்த முன்மாதிரிகளை நீங்கள் பின்பற்றுங்கள் என்ற கட்டளை நமக்கு இருக்கும் போது இந்த உண்மையை மறந்து இந்த அஹ்மதிய்யத்தின் எதிரிகளுக்கு பின்னால் செல்வது நமக்கு எவ்வாறு சாத்தியமாகும்? நம்முடைய ஈமானிலிருந்து நம்மை அகற்ற இவர்கள் செய்கின்ற முயற்சிகள்

அனைத்தும் அவர்கள் பக்கமே திரும்பி விடும். அவர்களின் எல்லா திட்டங்களும் தோல்வியுறும். அவர்களின் விருப்பம் ஒருபோதும் நிறைவேறாது. ஏனென்றால் நாம் நம்முடைய உண்மையான வாக்குறுதியைக் கொண்ட இறைவனைக் கண்டு கொண்டுள்ளோம். இறைவனின் செயல்ரீதியான சாட்சிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை தொண்டருடன் இருப்பதை நாம் கண்டிருக்கிறோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் நிறைவேறியிருப்பதை நாம் கண்டிருக்கின்றோம். இதன் பிறகு இந்த பயமுறுத்துபவர்களின் காரணமாக மற்றும் இவர்களின் கொடுமைகளின் காரணமாக எந்த இறைவன் ஒவ்வொரு சோதனை மற்றும் இன்பத்தின் போதும் ஜமாஅத்திற்கு மனஅமைதியை வழங்கி மன அமைதியுடன் அதனை கடக்கச் செய்தானோ அந்த இறைவனை எப்படி நாம் விட்டு விடுவோம்? அவன் நம்மை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய உண்மைத் தொண்டர் மீதான நம்பிக்கையில் மேலும் உறுதிப்படுத்தியுள்ளான். அவ்வாறிருக்க நமது இறைவனை விட்டு விட்டு நம் பார்வையில் ஒரு பைசாவுக்குக் கூட மதிப்பில்லாத இவர்களைப் போன்றவர்களை எவ்வாறு நாம் இறைவனாக்கி கொள்வோம். மேலும் நமது ஈமானை வீணாக்கி விடுவோம் என்பதும் இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ்வின் அன்பிலிருந்து இழப்பிற்குரியவர்களாகி விடுவோம் என்பதும் ஒருபோதும் நடைபெற முடியாத ஒன்றாகும்.

அவர்கள் இந்த எண்ணத்துடன் அஹ்மதிகள் மீது கொடுமைகளையும், கடுமைகளையும் காட்டுகின்றார்கள் என்றால் அது அவர்களின் தவறாகும். இந்த கடினங்களும், துன்பங்களும் இறைவனிடமிருந்து நம்மை விலக்குவதற்குப் பதிலாக அவனுக்கு அருகில் நாம் கொண்டு சேர்த்து விடுகிறது.

எவர்களைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றானோ, நாம் அந்த மக்களைச் சேர்ந்தவர்களாவோம்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: எதிரிகள் அவர்களிடம் வந்து உங்களுக்கு எதிராக மக்கள் (படையைத்) திரட்டியுள்ளனர். எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சுங்கள் என்று கூறினர். ஆனால் இது, அவர்களின் நம்பிக்கையை மேலும் வளரச் செய்தது. மேலும் இறைவனே எங்களுக்கு பாதுகாவலன் என்றும் அவர்கள் கூறினர். (3:174)

எனவே எதிரியின் கூட்டம் மற்றும் அவர்களின் ஒற்றுமை நம்மை நமது ஈமானில் முன்னேறச் செய்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் அல்லாஹ்வின் உதவி பெற்ற ஜமாஅத்திற்கு எதிராக மற்றெல்லா பிரிவுகளும், கூட்டமும் ஒன்றுபட்டு விடும் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு இவ்விஷயத்தில் நிறைவேறியிருப்பதை நம்மால் காண முடிகிறது. அது நடைபெறவும் செய்தது. இதில் நமது நம்பிக்கை மேலும் அதிகரிக்கின்றது. கடந்த காலத்தில் நபிமார்களுக்கு எதிராக அவர்கள் திரண்டது போன்று அல்லாஹ்வின் அடியார்கள் அவனுடைய அடைக்கலத்தின் கீழ் வந்து, அல்லாஹ் எங்களுக்கு போதுமானவன்; எங்களுக்கு வேறந்த அடைக்கலத்திற்கும் அவசியமில்லை. நாங்கள் எங்களுடைய இறைவனின் பாதுகாப்பின் கீழ் மட்டுமே வருகின்றோம். அவன் எங்களுடைய எதிரிகளுக்கு தண்டனை வழங்குவதற்கும் போதுமானவன் என்று கூறுவார்கள். எதிரிகளை பழிவாங்குவது மட்டுமல்ல. மாறாக அந்த அநீதி, கொடுமைகளை சகித்துக் கொண்டதன் காரணமாக நம்பிக்கையாளர்களுக்கு அருட்கொடைகளையும் அல்லாஹ் வழங்குகின்றான். ஆக இங்கு அல்லாஹ் போதுமானவன் என்பதன் பொருள் எல்லா அம்சங்களிலும் உள்ளடக்கியதாக உள்ளது. அல்லாஹ் எல்லா வகையிலும் நம்பிக்கையாளர்களுக்கு போதுமானவனாக இல்லாமல் இருப்பதற்கு என்ன நேர்ந்து விட்டது? அவன் மிகச் சிறந்த உதவியாளன் ஆவான். அவனை விட அதிகமாக தனது அடியாரின் விஷயங்களைப் புரிந்து கொள்பவர் வேறு யார் இருக்க முடியும்? அடியார் முழுமையாக அவன் முன் குனிந்தவாறு அவன்முன் தனது எல்லா விஷயங்களையும் எடுத்து வைத்து அவனையே சார்ந்து நிற்கும் போது அவன் எங்கு தனது எதிரியை பிடிக்கிறானோ அங்கு தனது அருட்களின் அறிவிப்பை செய்தவாறு பொறுமையாளர்களுக்கு நற்செய்தி உள்ளது என்ற நற்செய்தியை வழங்குகின்றான். இதனைப் பற்றி நான் கடந்த குத்பாக்களில் விளக்கியுள்ளேன்.

ஏக இறைவனின் அடைக்கலம் தேடக்கூடியவர்கள் அல்லாஹ்வின் கட்டளையின்படி வழங்கப்பட்ட துன்பங்களை அவர்கள் இறைதிருப்திக்காக சகித்துக் கொள்வார்கள்.

**அல்லாஹ் கூறுகிறான்:**

இத்தகையோருக்கு தங்களின் இறைவனிடமிருந்து அருளும் கருணையும் இறங்குகின்றன. இவர்களே நேர்வழி பெற்றவர்களாவர். (2:158)

ஆக, எவர்கள் எல்லா வகையான கடினங்களிலும் துன்பங்களிலும் எல்லா வகையான மன வேதனைகளுக்கு ஆளான பிறகும் இறைவனின் கரத்தை விட்டு விடாமல் அவனுடன் அடைக்கலம் தேடி, அவனிடத்தில் மூழ்கி விட முயற்சி செய்கின்றார்களோ அவர்களிடத்தில் உங்களுக்கு ஆன்மீக முன்னேற்றங்களும், பௌதீக அருட்கொடைகளும் கிடைக்கும் என அல்லாஹ் கூறுகின்றான். மேலும் நீங்கள் தான் நேர்வழியில் இருக்கின்றீர்கள் என்பதற்கான ஞானத்தையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்குகின்றான். அஹ்மதிய்யத்தின் எதிரிகள் என்னதான் கூறினாலும் சரி! பாருங்கள். உங்களை இஸ்லாத்திலிருந்து வெளியேற்ற நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம். நாங்கள் உண்மையாளர்கள் என்பதை இது வெளிப்படுத்துகின்றது என்று கூறினாலும் சரியே.

**ஆனால் அல்லாஹ் கூறுகிறான்:**

சோதனை மற்றும் துன்பங்களில் நம்பிக்கையாளர் என் பக்கம் குனிகின்றார். எனக்காக துன்பங்களை சகித்துக் கொள்கின்றனர். பிரிவுகள் ஒன்றிணைந்த போதிலும் தமது ஈமானை பாதுகாக்கின்றான் என்று கூறி எல்லா துன்பங்கள் மற்றும் சோதனைகளின் போது மௌனமாகி விடுகின்றார். இவர்கள் தான் நேர்வழி பெற்றவர்களாவர் என்பதற்கு சான்றல்ல. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் எல்லா பிரிவுகளும் ஒன்றிணைந்து விடும். ஆனால் நேர்வழிபெற்ற ஜமாஅத் ஒன்று மட்டும் தான் இருக்கும். எனவே இவர்களுடைய சான்று இவர்களுக்கு எதிராகத்தான் செல்கின்றது. நான் கூறியது போன்று இவர்கள் ஒன்றுபட்டு விடுவது இவர்களை ஒன்றும் நேர்வழி பெற்ற மக்களாக ஆக்கி விடாது. மேலும் அவன் முன் குனிவது, துன்பங்கள், சோதனைகளின் போது பழிவாங்குவதற்குப் பதிலாக அதனை சகித்துக் கொள்வது மற்றும் சகித்துக் கொண்டே செல்வது மேலும் அல்லாஹ்வின் முன் குனிந்து கொண்டே செல்வது போன்ற விஷயங்கள் தான் அல்லாஹ்வின் பரக்கத்துகள் மற்றும் ரஹ்மத்துகளின் வாரிசாக்குகின்றது. இன்று உலகில் இந்த கூட்டம் நிச்சயமாக சிறுபான்மையாக இருக்கலாம். ஆனால் அல்லாஹ்வின் பார்வையில் இக்கூட்டம் நேர்வழி பெற்றதாகும். மேலும் உலகின் நேர்வழிக்கு இன்ஷா அல்லாஹ் காரணமாக ஆகவுள்ளது. எனவே இந்த நிலையை அடைவதற்கு ரஹ்மத்துகள் மற்றும் பரக்கத்துகளைப் பெறுவதற்கு நேர்வழி பெற்றவர்கள் என அழைக்கப்படும் உரிமையைப் பெறுவதற்கு தமது இறைவனின் ரஹ்மத்துகள், பரக்கத்துகளைத் தேடுவதில் மூழ்கி விடுவது அவசியமாகும். முதல் அடியை அடியார்தான் எடுத்து வைக்க வேண்டும். அதன் பின்னர் அடியார் இறையருளுக்கு வாரிசாகின்றார். ஓர் உலகவாதிக்கு வெளிப்படையில் இறைவன் தென்படுவதில்லை. ஆனால் ஒரு நம்பிக்கையாளரின் கண்கள் இறைவனை கண்டு கொண்டிருக்கின்றன. அவன் தன் பக்கம் குனிபவர்களுக்கு வழிகாட்டுகின்றான். மேலும் அவர்களுக்கு காட்சியும் அளிக்கின்றான். அவன் தனது அருள்களால் கண்டுகொள்ளப்படுகின்றான். துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதன் மூலமாக கண்டு கொள்ளப்படுகின்றான். அவனுடைய அடியார்கள் மக்களின் துன்பங்களின் காரணமாக துயரப்பட்டு, அவன் முன் குனிந்தால் அவன் ஓடி வருகின்றான். அவன் தனது அடியார்களை தமது பாதுகாப்பில் எடுத்துக் கொள்கிறான். எதிரிகளை அவனே பழிவாங்குவான். மேலும் தனது அடியார்களுக்கு அருள் செய்கின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த எல்லா ஆற்றல்களையும் கொண்ட, பரக்கத்துகளை வாங்கக்கூடிய கருணை செய்யக்கூடிய துஆக்களை கேட்கக்கூடிய இறைவனிடத்தில் மூழ்கி விடுங்கள். அவனது பாதுகாப்பின்கீழ் வர முயற்சி செய்யுங்கள். நம்பிக்கையாளர்களுக்கு இவ்விஷயம்தான் எப்போதும் பயனளிக்கும்.

எனவே உலகம் இந்த அல்லாஹ்வின் அடியார்களின் மீது எல்லா வகையான தீய விஷயங்களை வீச முயற்சி செய்தாலும் எல்லா வகையான துன்பங்களை இழைத்தாலும் அல்லாஹ் ஏக இறைவனுள் அடைக்கலம்

தேடுபவர்கள் மீது எல்லா பரக்கத்துகளையும், ரஹ்மத்துகளையும் இறக்குகின்றான். மேலும் அல்லாஹ்வும், அவனது மலக்குகளும் உலக மக்களே! நீங்கள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஃபத்வாக்களைக் கொடுத்து அநீதியின் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் ரஹ்மத்துகள் மற்றும் அருட்களின் வாரிசுகள் இவர்களே ஆவர். மேலும் இந்த மக்கள் தான் அல்லாஹ்வின் பார்வையில் நேர்வழிபெற்றவர்கள் ஆவர். மேலும் உலகத்தின் நேர்வழியும் கூட இவர்களையே சார்ந்துள்ளது. ஏனென்றால் இவர்கள் என் கூற்றிற்கு செவிமடுத்து காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என அல்லாஹ் கூறுகின்றான்.

எனவே பலவகையான துன்பங்களின் காலகட்டங்களையும் சந்தித்து வரும் அஹ்மதிகளிடமும், எனக்கு கடிதம் எழுதும் எல்லா அஹ்மதிகளிடமும், எதிரிகளின் தீங்கிலிருந்து தப்பிக்க துஆவுக்காக என்னிடம் கூறுபவர்களிடமும் நான் கூறுகின்றேன். உங்கள் துஆக்களில் அதிக கவனம் செலுத்துங்கள். மேலும் எவர்கள் நேரடியாக துன்பங்களுக்கு ஆளாகவில்லையோ அவர்கள் தமது நம்பிக்கை கொண்ட சகோதர, சகோதரிகள் மற்றும் பிள்ளைகளின் துன்பங்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்காக துஆ செய்யுங்கள். உங்களை மட்டும் நீங்கள் கருத்தில் கொள்ளாதீர்கள். உங்களின் உலகியல் கஷ்டங்களை மட்டும் கருத்தில் கொண்டு வேதனைப்பட வேண்டாம். மாறாக அநீதி என்னும் ஆட்டுரலில் சிக்கியுள்ள தமது சகோதர, சகோதரிகள் மற்றும் பிள்ளைகளை கருத்தில் கொள்ளுங்கள். இந்த அனுதாப உணர்வுடன் செய்யப்பட்ட துஆக்கள் உங்களையும் அல்லாஹ்வின் ரஹ்மத்துகள் மற்றும் பரக்கத்துகளின் வாரிசாக ஆக்கி விடும். எவர் உண்மையான நம்பிக்கையாளரோ அவரே உண்மையான நேர்வழிபெற்றவராவார். மேலும் எவர் தமது நம்பிக்கை கொண்ட சகோதரனின் வேதனையை துன்பத்தை தமது வேதனையாக தனது துன்பமாக கருதுவாரோ அவரே உண்மையான நம்பிக்கையாளர் ஆவார். எவ்வாறு உடலின் ஒரு உறுப்பு வேதனைக்கு உள்ளாகும் போது முழு உடலும் வேதனைக்குள்ளாகின்றதோ அதேபோன்று ஒரு நம்பிக்கையாளர் மற்ற நம்பிக்கையாளரின் துன்பத்தை உணர்கின்றார்.

எனவே இந்நிலையில் உலகம் முழுவதும் உள்ள எல்லாருக்கும் அநீதிக்குள்ளாகியுள்ள துன்பம் மற்றும் கடினங்களுக்குள்ளாகியுள்ள நமது சகோதரர்களுக்காக குறிப்பாக துஆ செய்வதன் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். எவர் அஹ்மதிய்யத்தின் காரணமாக ஏதாவதொரு வகையில் துன்பத்திற்கு உள்ளாகியுள்ளாரோ மேலும் எவர்கள் அநீதியான சட்டத்தின் மூலமாக நாட்டின் அடிப்படை குடியுரிமை மற்றும் மார்க்க சுதந்திரத்திலிருந்து இழப்பிற்குரியவர்களாகி உள்ளார்களோ அவர்களுக்காக ஒவ்வொரு அஹ்மதியும் தினமும் குறைந்தது இரண்டு ரக்அத்துகள் நஃபில் தொழ வேண்டும். அதேபோன்று ஜமாஅத் முன்னேற்றத்திற்காகவும் குறிப்பாக துஆ செய்யுங்கள். எனவே ஒவ்வொரு அஹ்மதியும் தமது உள்ளத்தின் வேதனையை முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின் முன் எடுத்து வைத்தால் அல்லாஹ்வின் கனிவான பார்வை அவர் மீது எவ்வாறு விழுகின்றது என்பதை அவரே கண்டு கொள்வார். முன்னரை விட அதிகமாக அல்லாஹ் அவர்களை தமது பாதுகாப்பில் எடுத்துக் கொள்வான்.

எங்களது பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் அஹ்மதி அல்லாத மாணவ, மாணவிகள் எங்களுக்கு தொல்லை தருகின்றனர். பலவகையான ஜாடை பேசுகின்றனர் என எனக்கு சில அஹ்மதி மாணவ, மாணவிகள் கடிதம் எழுதுகின்றனர். படிப்பு பாதிக்கப்படுகின்றது. எந்த அளவுக்கு என்றால் ஆசிரியர்கள் தமது பதவிக்குரிய கண்ணியத்தை மறந்து விடும் அளவுக்கு கீழ்த்தரமான சிந்தனை உடையவர்களாக ஆகி விட்டனர். ஒரு காலத்தில் ஆசிரியர் என்பவர் தனி கண்ணியத்திற்குரிய அந்தஸ்த்தைப் பெற்றிருந்தார். அவருக்கான தனி இடம் இருந்தது. மார்க்கத்திற்கு அப்பாற்பட்டு ஒவ்வொரு மாணவர் மீதும் அநுதாபம் கொண்டு அவருடைய கல்வியின் தாகத்தை தணிக்கக் கூடியவராக இருந்தார். இது ஒரு ஆசிரியரின் கடமையாக இருந்தது.

ஆனால் இன்று நல்லொழுக்கமிக்கவர்கள் என வாதிடுபவர்கள்; மேலும் தங்களை சிறந்த முஸ்லிம் என கூறிக் கொள்பவர்கள் தமது கண்ணியான தொழிலை நாசப்படுத்துகின்றனர். மேலும் நாங்கள் இவ்வாறு செய்வது மார்க்கப்பற்று ஆகும் எனக் கூறுகின்றனர். மார்க்கப்பற்றல்ல. மாறாக நீங்கள் வெளிப்படுத்துவது

அறிவீனத்தின் உச்சமாகும். எவர் தமது தொழிலில் நீதியுடன் நடக்கவில்லையோ அவர் இஸ்லாத்தின் அடிப்படை போதனையைப் புரிந்து கொள்ளவில்லை. எவர் தமது பகைமை, வெறுப்பின் காரணமாக நீதியினை நிலைநாட்டவில்லையோ அவர் இஸ்லாத்தின் அடிப்படை போதனையை நிராகரிக்கின்றார்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். (5:9)

ஆக இவர்கள் படித்த முட்டாள்கள் ஆவர். அறிவீனமான முல்லாக்களுக்குப் பின்னால் சென்று தமது பணியில் அநீதியிழைப்பது மட்டுமல்லாமல் அல்லாஹ்வின் கட்டளைகளையும் நிராகரிக்கின்றார்கள். ஆனால் நாங்கள் நேர்வழிபெற்றவர்கள் ஆவோம் என்பது இவர்களின் வாதமாக உள்ளது. எனவே ஒரு நம்பிக்கையாளருக்கு இந்த எல்லா அநீதிகள், வரம்பு மீறுதல்களுக்கு ஒரேயொரு தீர்வே உள்ளது. அது அல்லாஹ்வின் முன் குனிவதே ஆகும். ஏக இறைவனுக்குள் அடைக்கலம் தேட முயல்பவர்களுக்குரிய கடமையை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள். அதில் மூழ்கி விடுங்கள். இந்த அநீதிகள், வரம்புமீறுதல்கள் இப்போது பாகிஸ்தானிடம் மட்டுமல்ல. மாறாக சில பணக்கார முஸ்லிம் நாடுகளும் தமது எண்ணெய் வளத்தின் செல்வத்தின் அடிப்படையில் ஏழை நாடுகளிலும் வெறுப்பின் சுவர்களை எழுப்பி விடுகின்றன. ஆதாரங்களால் எதிர்கொள்வது அவர்களால் இயலாத காரியமாகும். அவ்வாறு செய்தால் அது அவர்களின் உரிமையாகும். ஆனால் அவர்களிடத்தில் ஆதாரம் ஒன்றுமில்லை. எனவே பகைமை மற்றும் வெறுப்பின் சுவர்களை எழுப்புவதை தவிர்த்து அவர்களுக்கு நேர்வழி தெரியவில்லை. தங்களது செல்வத்தின் மூலமாக எந்த ஏழை நாடுகளுக்கு இவர்கள் உதவி செய்கின்றார்களோ குறிப்பாக ஆப்பிரிக்காவின் சில நாடுகளிலுள்ள சில இடங்களில் தங்களது செல்வத்தின் மூலமாக அஹ்மதிகள் மீது சில தடைகளை ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகின்றது. ஆனால் அஹ்மதிகள் அல்லாஹ்வின் அருளால் ஈமானில் மிகவும் உறுதிமிக்கவர்கள் ஆவர். இதனால் அவர்களுக்கு எந்த பாதிப்புமில்லை.

நாங்கள் அரபு நாட்டைச் சேர்ந்தவர்கள். எங்களை விட திருக்குர்ஆன் யாருக்கு அதிகம் தெரியும்? என்று இவர்கள் வாதம் செய்கின்றார்கள். ஆனால் எந்தவொரு சமுதாயத்தின் பகைமையும் உங்களை அநீதியிழைக்க தூண்ட வேண்டாம் என்று நான் எடுத்து வைத்த இந்த ஒரு திருக்குர்ஆன் கட்டளையை இவர்கள் புரிய விரும்பவில்லை; புரிவதுமில்லை. அதன்படி அமல் செய்வதுமில்லை. திருக்குர்ஆன் தெரிந்திருப்பது வேறு விஷயமாகும். திருக்குர்ஆன் தெரிந்தும் இருக்கலாம். ஆனால் திருக்குர்ஆனின் கட்டளைகளை மறந்து விட்டனர். எனவேதான் இக்காலத்தில் இவர்களை நேர்வழிப்படுத்த வாக்களிக்கப்பட்ட மஸீஹின் அவசியம் ஏற்பட்டது. ஆனால் அவரை ஏற்றுக் கொள்ள இவர்கள் தயாரில்லை. இவர்கள் இஸ்லாத்திற்கு தொண்டாற்றுவதற்குப் பதிலாக இஸ்லாத்திற்கு களங்கம் ஏற்படுத்தி வருகின்றனர். இன்று இஸ்லாத்திற்கு எதிராக உலகில் எழுந்துள்ள பலவகையான பிரச்சனைகளுக்கு தத்தமது வட்டத்தில் இஸ்லாத்தின் தலைவர்களாகத் திகழும் இவர்களே பொறுப்பாவார்கள். இஸ்லாத்தின் எதிரிகளுக்கும் எதிரிகளின் சைகைகளுக்கேற்ப இவர்கள் இவ்வாறு திட்டம் தீட்டுகின்றார்கள் என்பது கற்பனையான விஷயமல்ல. தங்களுக்குத் தாங்களே நஷ்டமிழைக்கும் அளவிற்கு இவர்களின் கண்களில் திரை விழுந்து விட்டது. இஸ்லாத்தைக் களங்கப்படுத்த முயற்சி செய்கின்றனர். இவர்களால் இஸ்லாத்தை அழிக்க இயலாது. இஸ்லாம் உலகில் பரவுவதற்காவே வந்துள்ளது.

இன்ஷா அல்லாஹ் இன்னும் வளரும். இக்காலத்தில் அல்லாஹ்வின் பயில்வானாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பியிருக்கின்றான். இப்போது இந்த மார்க்கம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவச் செய்வது அன்னாரின் ஜமாஅத்தின் பணியாகும். இன்ஷா அல்லாஹ் நாம் அந்த பணியை செய்து வருவோம். நான் மீண்டும் எனது முதல் விஷயத்தின் பக்கம் வருகிறேன். எதிரிகளின் ஜமாஅத்திற்கு எதிராக பாகிஸ்தானிலும் முயற்சி செய்கின்றார்கள். இந்தியாவின் சில பகுதிகளிலும் சில முயற்சிகளை செய்கின்றார்கள். நான் கூறியது போன்று சில ஆப்பிரிக்க நாடுகளிலும் இது நடைபெறுகின்றது. கடந்த நாட்களில் இந்தோனேஷியாவில் ஒரு தீவில் அஹ்மதிகளுக்கு எதிராக குழப்பம் செய்யப்பட்டது. எந்த அஹ்மதியின் மீது சில ஆண்டுகளுக்கு முன்

அநீதியிழைக்கப்பட்டு அவருடைய வீட்டை அடித்து நொறுக்கி எரித்து விட்டு அவரை ஊரை விட்டு வெளியேற்றப்பட்டாரோ அவர் அரசாங்கம் கூறியதற்கிணங்க மீண்டும் சில காலம் கழித்து தமது வீட்டில் குடியேறி வந்தார். எந்த முல்லாக்களுக்கு சில அரசாங்கம் பணம் வழங்குகின்றனவோ அவர்கள் அந்த அஹ்மதியின் வீட்டை மீண்டும் எரித்தார்கள். அவரை அடித்து உதைத்தார்கள். நீங்கள் எங்கிருந்தீர்களோ அங்கேயே மீண்டும் சென்று விடுங்கள் என அரசாங்கம் இறுதியில் கூறி விட்டது. அவருக்கு தனது ஊரையும், செல்வத்தையும் இழக்க நேரிட்டது. ஆக, இவர்கள் செய்கின்ற அநீதிகளின் காரணமாக நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் முன் குனிகின்றார்கள். மேலும் குனிந்து கொண்டே இருப்பார்கள். நம்முடைய வெற்றியின் ஆயுதமும் இதுதான். இன்று அந்த அநீதியாளர்கள் தங்களை எல்லா ஆற்றலுக்கும் அதிபதியாக கருதுகின்றனர். ஆனால் இதே மக்கள் நம்பிக்கையாளர்கள் மற்றும் அநீதியிழைக்கப்பட்டவர்களின் கீழ் கொண்டுவரப்படுவார்கள். இன்ஷா அல்லாஹ் துஆதான் நமது வெற்றியின் ஆயுதமாகும். மேலும் இந்த ஆயுதமும்தான் எதிரியின் தீங்கை அவர்கள் பக்கமே திரும்பச் செய்யும். இதை தவிர நம்மிடத்தில் வேறெதுவுமில்லை. எந்த அளவுக்கு தீவிரமாக துடிப்புடன் இந்த ஆயுதத்தை பயன்படுத்துவோமோ அந்த அளவுக்கு விரைவாக நாம் அஹ்மதிய்யத்தின் வெற்றியின் காட்சியை இன்ஷா அல்லாஹ் நாம் காண்போம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள்:**

நாம் பெற விரும்புகின்ற எல்லா நோக்கங்களையும் துஆவின் மூலமாக மட்டுமே நாம் பெற முடியும். துஆவில் மிக வலிமை உள்ளது. துஆவின் மூலமாகவே அனைத்தும் நடக்கும் என அல்லாஹ் இல்ஹாம் மூலமாக மீண்டும் மீண்டும் எனக்கு கூறியுள்ளான். நம்முடைய ஆயுதம் துஆவேயாகும். இதனை தவிர்த்து வேறெந்த ஆயுதமும் நம்மிடம் இல்லை. நாம் மறைவாக வேண்டுகின்ற அனைத்தையும் அல்லாஹ் நிறைவேற்றி விடுகின்றான். இந்த ஒரே வழிதான் இப்போது இஸ்லாத்திற்கு உள்ளது. இதனை மூட முல்லாக்கள் மற்றும் தத்துவஞானிகள் புரிந்து கொள்ள முடியாது. நமக்கு சண்டையடுவதற்குரிய வழி திறந்திருந்தால் அதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்திருக்கும். நமது துஆக்கள் அதற்குரிய நிலையை அடைந்து விடும் போது பொய்யர்கள் தானாகவே அழிந்து விடுவார்கள். நம்மைப் பொருத்தவரை துஆவை விட சிறந்த ஆயுதம் வேறெதுவுமில்லை. இப்போது எந்த வழிமுறையின் மூலமாக இறைவன் மார்க்கத்திற்கு முன்னேற்றம் வழங்க உள்ளான் என்பதை எவர் புரிந்து கொள்கின்றாரோ அவர் நற்பாக்கியம் பெற்றவராவார்.

ஆக, நாம் பயன்படுத்த வேண்டிய ஆயுதம் இதுதான். இந்த ஆயுதத்தை முழுமையாக பயன்படுத்துவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். நாம் நமது கடமைகளுடன் நஃபில்களை நிறைவேற்றி துஆக்கள் செய்வதில் அதன் உயர்ந்த தரத்தை அடையும் போதுதான் நாம் ஏக இறைவனுள் அடைக்கலம் தேடுதலின் கடமைகளை நிறைவேற்றுபவர்களாக முடியும். அல்லாஹ் அதற்குரிய பாக்கியத்தை நமக்கு வழங்குவானாக. ஆமீன்.

துஆக்களின் முக்கியத்துவம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில வழிகாட்டுதல்களை முன் வைக்கின்றேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பாவங்களிலிருந்து இரட்சிப்பு மற்றும் இறை திருப்திக்கான துஆவே மிகச் சிறந்த துஆவாகும்.

அல்லாஹ் திருப்தி கொண்டு விட்டால், பாவங்களிலிருந்து இரட்சிப்பு கிடைத்து விட்டால் நம்பிக்கையாளர்களின் மற்ற துஆக்கள் தானாகவே ஒப்புக்கொள்ளப்பட்டு விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நம்முடைய எல்லா அடிப்படையும் துஆவில்தான் உள்ளது. அல்லாஹ் துஆ செய்யும்படி நம்பிக்கையாளர்களை வலியுறுத்தியுள்ளான். மாறாக, நம்பிக்கையாளர் எப்போது என்னிடத்தில் துஆ செய்வார்? நான் அவருக்கு வழங்குவேன் என்ற எதிர்பார்ப்பில் அல்லாஹ் இருக்கின்றான். ஆனால் நிபந்தனை என்னவென்றால், துஆவுக்குரிய உரிமையை வழங்கியவாறு துஆ செய்தல் வேண்டும்.

**ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்:**

துஆவின் உதாரணம் ஒரு சுவையான நீரூற்றினை போன்றதாகும். அதன் அருகில் நம்பிக்கையாளர் அமர்ந்திருக்கின்றார். அவர் எப்போது விரும்பினாலும் அதிலிருந்து அவரால் தாகத்தை தணித்துக் கொள்ள இயலும். எவ்வாறு ஒரு மீன் தண்ணீரின்றி உயிர் வாழ இயலாதோ அதுபோன்று ஒரு நம்பிக்கையாளரின் உயிர் துடிப்பு துஆவாகும். அதுவன்றி அவரால் உயிர் வாழ இயலாது. நம்பிக்கையாளருக்கு ஆனந்தமும் மகிழ்ச்சியும் கிடைக்கின்ற தொழுகைதான் துஆவுக்குரிய உகந்த இடமாகும். இதற்கெதிரில் உலக சுகபோகங்களில் மூழ்கி இருப்பதால் ஒரு தீயவனுக்கு கிடைக்கின்ற முழுமையான இன்பம் என்பது ஒன்றுமற்றதாகும். துஆவின் மூலமாக கிடைக்கின்ற மிகப்பெரிய விஷயம் இறைநெருக்கமாகும். துஆவின் மூலமாகவே மனிதன் இறைவனை நெருங்குகின்றான். மேலும் அவனை தன்பக்கம் ஈர்க்கின்றார். நம்பிக்கையாளரின் துஆவில் முழுமையான தூய்மையும், எல்லையும் அடைந்து விடும் போது இறைவனுக்கும் அவர் மீது கருணை ஏற்பட்டு விடுகின்றது. மேலும் இறைவன் அவருக்கு உதவியாளனாகி விடுகின்றான்.

**பின்னர் அன்னார் கூறுகின்றார்கள்:**

நன்றாக புரிந்து கொள்ளுங்கள். துஆ மிகப்பெரிய செல்வமாகும். எவர் துஆவை விட்டு விடுவதில்லையோ அவருக்கு இம்மையிலும் மறுமையிலும் ஆபத்துகள் வருவதில்லை. எந்நேரமும் ஆயுதம் ஏந்திய சிப்பாய்கள் சுற்றிவந்து பாதுகாத்து வரும் கோட்டையினுள் அவர் பாதுகாப்பாக இருக்கின்றார்.

ஆக இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள துஆ என்னும் ஆயுதம் மிக முக்கியமான ஆயுதமாகும். இந்த துஆ என்னும் ஆயுதத்தால் தான் லேக்ராம் தனது தீய முடிவை அடைந்தான். அதன் மூலமாகவே டூயினுடைய தீய முடிவையும் உலகம் கண்டது. அன்னாரின் எதிர்ப்பில் உச்சத்தை அடைந்த ஒவ்வொரு எதிரியும் இதன் மூலமாகவே இழிவின் அடையாளமானார். காதியானை அழித்து விடுவோம் என்று வாதம் செய்தவர்களைக்கூட இந்த துஆவின் மூலமாகவே எதிர்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக அவர்களின் வாதம் வெறும் வீண் வாதமாகவே திகழ்ந்தது. அஹ்மதிய்யத்தின் கைகளில் திருவோட்டை ஏந்தச் செய்வோம் என்றும், அஹ்மதிய்யத்தை கேன்ஸர் என்று அழைத்து அதனை அழித்து விடுவோம் என்றும் வாதிட்டவர்களையும் இந்த துஆவின் மூலமே எதிர்கொள்ளப்பட்டது. அதனால் அவர்கள் அடையாளம் தெரியாமல் போய் விட்டார்கள். இன்றும் இன்ஷா அல்லாஹ் எதிர்ப்பின் புயல்கள் இந்த துஆவின் மூலமாகவே அவர்களின் பக்கம் திரும்பும். அஹ்மதிய்யத் எவ்வாறு வெற்றியின் புதுப்பாதைகளைக் கடந்து செல்கின்றது என்பதை உலகம் கண்டு கொள்ளும் (இன்ஷா அல்லாஹ்). எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆவிற்கு உகந்த இடம் தொழுகையாகும் என்று கூறியது போன்று துஆவின் பக்கம் ஒரு சிறப்பான கவனமும், ஆர்வமும் கொள்வது நமது பணியாகும். நாம் நமது தொழுகைகளை அழகுபடுத்த வேண்டும். நான் கூறியது போன்று குறைந்தபட்சம் இரண்டு ரக்அத்துகள் நஃபில் தொழுகையை ஜமாஅத் முன்னேற்றத்திற்காகவும், அநீதியிழைக்கப்படுகின்ற அஹ்மதிகளுக்காகவும் தொழுது வாருங்கள். ஒவ்வொரு அஹ்மதியும் இதனை தனது கடமையாக்கிக் கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் இரண்டு ரக்அத்துகள் நஃபில் தொழுகையை உங்கள் மீது கடமையாக்கிக் கொள்ளுங்கள் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் கூறியுள்ளார்கள். நம்பிக்கையாளரின் துஆவில் முழுமையான தூய்மையும், கவனமும் ஏற்படும் போது அல்லாஹ்வின் பக்கமே எல்லா சிந்தனையும் செல்லும் போது அவனிடத்தில் மூழ்கி விடும் போது இறைவனுக்கும் அவர் மீது கருணை ஏற்படுகின்றது. ஒவ்வொரு அஹ்மதியும் இந்த தூய்மையையும், கவனத்தையும் ஏற்படுத்த முன்னரை விட அதிகம் முயற்சி செய்தால் அல்லாஹ்வின் கருணையையும், அருளையும் மிக அருகில் கண்டு கொள்ளலாம். இந்த தூய்மை மற்றும் கவனத்தை ஏற்படுத்த ஏக இறைவனிடத்தில் ஒன்றி விடுவது அவசியமாகும். நாம் இந்நிலையை அடைந்து விடும் போது உலக மக்களின் எல்லா தீங்கிலிருந்தும் நாம் பாதுகாப்பு பெற்று விடுவோம் இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று, ஆயுதம் ஏந்திய சிப்பாய்கள் எப்பொழுதும் பாதுகாத்து வரும் கோட்டைக்குள் நாம் பாதுகாப்பு பெற்றவர்களாக ஆகி விடுவோம். அல்லாஹ் இந்த முக்கிய விஷயத்தைப் புரிந்து அதன்படி செயல்படும் பாக்கியத்தை நமக்கு வழங்குவானாக.

இறுதியில் நான் மீண்டும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டுதலை முன் வைக்கின்றேன்.

நினைவில் கொள்ளுங்கள். எதுவரை ஒருவர் பொறுமை செய்வதில் உச்சத்தை அடைந்து விடுவதில்லையோ மேலும் உறுதிப்பாட்டுடன் துஆவில் மூழ்கி இருப்பதில்லையோ அதுவரை துஆவிலிருந்து அவரால் பயன்பெற முடியாது. மேலும் அல்லாஹ்வின் மீது தப்பெண்ணம் கொள்ளாமல் எல்லா ஆற்றல்களின் அதிபதியாக அல்லாஹ்வை கருதி அதில் நம்பிக்கை கொண்டு பொறுமையுடன் துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும். அவருடைய துஆவை அல்லாஹ் கேட்கும் அந்த நேரம் வந்து விடும். மேலும் அல்லாஹ் அவருக்கு பதிலளிப்பான். எந்த மக்கள் இந்த வழிமுறையை பரிசோதித்து பார்ப்பார்களோ அவர்கள் ஒருபோதும் துர்பாக்கியசாலியாகவும், இழப்பிற்குரியவர்களாகவும் இருக்க மாட்டார். மாறாக நிச்சயமாக அவர்கள் தமது நோக்கத்தில் வெற்றி பெறுவார்கள். இறைவனின் ஆற்றல்களும், சக்திகளும் அளவற்றவையாகும். அவன் மனிதனை முழுமைப்படுத்துவதற்கு பொறுமை என்ற சட்டத்தை விதித்துள்ளான். அவன் அதனை மாற்றிக் கொள்வதில்லை. எவர் இந்த சட்டத்தை, இறைவன் தனக்காக மாற்ற வேண்டும் என விரும்புகின்றாரோ அவர் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் கண்ணியக்குறைவையும் அவமரியாதையையும் செய்கின்றார். மேலும் இதனையும் நினைவில் கொள்ளுங்கள். சிலர் பொறுமையின்மையை வெளிப்படுத்துகின்றனர். நான் கூறுகின்றேன். எவர் பொறுமை செய்வதில்லையோ அதனால் அவர் இறைவனுக்கு என்ன நஷ்டத்தை ஏற்படுத்தி விடுவார்? அவர் தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொள்வார். பொறுமையின்மையை வெளிப்படுத்தி எங்கு செல்கின்றார் என்பதை அவரே கண்டு கொள்வார்.

பொறுமை மற்றும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி அல்லாஹ் நம்மை அவன் முன் குனிபவர்களாக ஆக்குவானாக! மேலும் துஆ செய்வதில் நாம் ஒருபோதும் சோர்வடையக் கூடாது. ஒருபோதும் பொறுமையை நாம் கைவிட்டு விடக்கூடாது. உறுதிப்பாட்டுடன் துஆ செய்து வருதல் மற்றும் நம்முடைய கடமைகளிலிருந்து விலகாமல் இருப்பது தான் பொறுமை என்பதன் பொருளாகும். அல்லாஹ் நமது துஆக்களில் இறைவணக்கத்தில் முன்னேற்றத்தை வழங்கவும் துஆ செய்யுங்கள். நம்முடைய இறைவணக்கத்தில் தனது அன்பை ஏற்படுத்த வேண்டும். நாம் இந்த தரத்தை அடைந்து விடும் போது எதிரிகளின் தற்காலிக மகிழ்ச்சி விரைவில் துக்கமாக மாறி விடுவதை நாம் கண்டு கொள்வோம். இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். அது நிச்சயமாக முழுமை பெறும். இன்ஷா அல்லாஹ்.

இறுதியில் திருக்குர்ஆனின் துஆ ஒன்றினை நான் படிக்கிறேன்.

**ரப்பனா அஃப்ரிக் அலைனா ஸப்ரவ் வஸப்பித் அக்தாமனா ஃபன்ஸுர்னா அலல் கவ்மில் காஃபிரீன்** – எங்கள் இறைவா! எங்களுக்கு பொறுமையை வழங்குவாயாக! எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! மேலும் நிராகரிக்கும் சமுதாயத்திற்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக ஆமீன்.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 03.12.2010**

Translated by : **Maulvi ABDUR RAHMAN TAHIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**